

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று முன்தினம் (14.11.2024) காலை, மருத்துவர் பாலாஜியை, கிண்டி, கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனையில் நேரில் சந்தித்து நலம் விசாரித்தார். இந்நிகழ்வில் கலைஞர் நூற்றாண்டு உயர்சிறப்பு மருத்துவமனை இயக்குநர் மரு.பார்த்தசாரதி மற்றும் உயர் மருத்துவர்கள் உடனிருந்தனர்.

### அரியலூரில் இந்திய குத்துச்சண்டை சம்மேளனத்தின் சார்பில்

# தேசிய அளவிலான தொழில் முறை குத்துச் சண்டை போட்டி!

### அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவங்கி வைத்தார்!

அரியலூர், செப். 15-

அரியலூர் தனியார் திருமண மண்டபத்தில் இந்திய குத்துச்சண்டை சம்மேளனத்தின் சார்பில் தேசிய அளவிலான தொழில் முறை குத்துச்சண்டை வீரர்களுக்கான போட்டிகளை தமிழ்நாடு அரசு போக்குவரத்து துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தொடங்கி வைத்தார்.

இப் போட்டியில் தமிழ்நாடு,கேரளா, கர்நாடகா, பஞ்சாப், சிக்கிம், உத்தரகாண்ட் மாநிலங்களைச் சேர்ந்த 22 வீரர்கள் கலந்து கொண்டனர் இதில் வீரர்களின் எடைகளுக்கு ஏற்ப 11 பிரிவுகளாக போட்டிகள் நடத்தப்பட்டது போட்டிகளில் தேசிய அளவில் குத்து சண்டை போட்டியில் கலந்து கொண்டு வெற்றி பெற்றவர்கள் நடுவர்களாக செயல்பட்டனர் இப் போட்டிகள் தமிழ்நாடு குத்துச் சண்டை சங்கத்தின் புரமோட்டடார் ரஜினிகாந்த் மற்றும் இந்திய குத்துச்சண்டை சம்பேளனத்தின் மேற்பார்வையாளர் மணிந்தர்சிங் மேற்பார்வையில் நடைபெற்றது. போட்டிகளில் வெற்றி பெற்ற வீரர்களுக்கு பரிசுகள் மற்றும் சுழற் கோப்பைகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்ச்சியினை ஏற்பாடு செய்த மாவட்டச் செயலாளர் ராஜேஷ், மாவட்ட குத்து சண்டை அமைப்பின் கௌரவத் தலைவர் முன்னாள் நகர் மன்ற உறுப்பினர் சந்திரசேகர், நகர கழக செயலாளர் இரா.முருகேசன், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி. லூயிகதிரவன், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் அருண் ராஜா, மாவட்ட இலக்கிய அணி துணை அமைப்பாளர் சுர்ஜித் மற்றும் மணிகண்டன், மருத்துவர் முகமது ரியாஸ் ,இதில் வெற்றி பெறும் வீரர்கள் பெற்ற புள்ளிகளின் அடிப்படையில் குத்துச் சண்டை வீரர்கள் தரவரிசை பட்டியலில் இடம் பெறுவார்கள். இப்போட்டிகளை பொது மக்கள் பலரும் பார்த்து வீரர்களை உற்சாகப்படுத்தினர்.



நாகப்பட்டினம் மாவட்டம் திருக்குவளை அண்ணா பல்கலைக்கழக உறுப்பு கல்லூரியில் உயர் கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன், மாவட்டப் பொறுப்பு அமைச்சர் பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி ஆகியோர் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் ப.ஆகாஷ், தமிழ்நாடு மீன்வளர்ச்சி கழக தலைவர் என்.கௌதமன், தமிழ்நாடு தாட்கோ கழக தலைவர் உ.மதிவாணன், கீழ்வேளூர் சட்டமன்ற உறுப்பினர் வி.பி.நாகை மாலி ஆகியோர் கலந்து கொண்டனர்.

### நாகையில் என்.கௌதமன் பங்கேற்பு!

# ஓவியக்கலையின் திறமையை மேம்படுத்த “சித்திரக்கடல்” கூடம்!

### அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி திறந்து வைத்தார்!

நாகை, நவ.15-

நாகை மாவட்ட ஆட்சியர் அவர்களின் தலைமையில் செயல்பட்டு வரும் மாவட்டக் கல்வி தன் முனைப்புத் திட்டமானது பள்ளி மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக பல திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில் மாணவர்களின் படைப்பாற்றல் திறமையை மேம்படுத்தும் விதமாக அரசு பள்ளி மாணவர்களின் ஓவியத் திறனை மேம்படுத்த நாகை நீலா தெற்கு வீதியில் நூற்றாண்டு பழமை வாய்ந்த, அதன் சிறப்புத் தன்மை குறையாமல் அப்படியே புதுப்பித்து “பொன்னி சித்திரக் கடல்” கூடம் பொன்னி சித்திரக் கூடத்தின் மூலம் பள்ளி மாணவர்களுக்கு ஓவியக் கலையின் அனைத்து வகைமைகளும் முற்றிலும் இலவசமாக பயிற்சி அளிக்கப்படும். இம்மையமானது வார விடுமுறை நாட்களான சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் இயங்கும். ஓவியக்கலையில் சிறந்து விளங்கும் ஓவிய ஆசிரியர்களால் பயிற்சி வழங்கப்படுகிறது. மேலும் தமிழ்நாட்டில் ஓவியக் கலையில் சிறந்து விளங்கும் கலைஞர்களைக் கொண்டு சிறப்புப் பயிற்சி வகுப்புகளும் நடத்தப்படும்.

இந்த பொன்னி சித்திரக் கூடத்தினை நாகை மாவட்டப் பொறுப்பு அமைச்சரும், பள்ளி கல்வித்துறை அமைச்சருமான அன்பில் மகேஷ் பொய்யாமொழி திறந்து வைத்தார்

நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் ப.ஆகாஷ், நாகை மாவட்ட கழக செயலாளரும், தமிழ்நாடு மீன்வளர்ச்சி கழக தலைவருமான என்.கௌதமன்;, நாகை சட்டமன்ற உறுப்பினர் ஜெ.முகம்மது ஷா நவாஸ், நாகை நகரக்கழக செயலாளர், நகர மன்ற தலைவர் த.இரா.மாரிமுத்து, நாகூர் நகரக் கழக செயலாளர் எம். ஆர். செந்தில்குமார், மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை அமைப்பாளர் ஆர்.ஏ.டி. அண்ணாதுரை, நகர் மன்ற உறுப்பினர் நம்பியார் நகர் சுரேஷ், மாவட்ட வர்த்தக அணி துணை அமைப்பாளர் எஸ்.எம்.ஏ.கணேசன், நாகை நகராட்சி.டி.லீனா சைமன், மாவட்டக் கல்வி தன்முனைப்புத் திட்ட ஒருங்கிணைப்பாளர் ஆதி உதயகுமார், மாவட்டக் கல்வித் தன்முனைப்புத் திட்ட ஆசிரிய தூதுவர்கள், ஓவிய பயிற்சி ஆசிரியர்கள், அரசு அலுவலர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர்.

# உதகை நகரத்தில் வாக்குச் சாவடி பாக முகவர்கள் தீவிரமாக பணியாற்ற முடிவு!

### ஜார்ஜ் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தீர்மானம்!

உதகை, நவ. 15 -

உதகை நகர தி.மு.க. செயற்குழுக் கூட்டம் உதகை கலைஞர் அறிவாலயத்தில் நடைபெற்றது. நகர அவைத் தலைவர் ஜெயகோபி தலைமை வகித்தார். நகரச் செயலாளர் ஜார்ஜ் வரவேற்புரையாற்றினார். மாவட்ட துணைச் செயலாளர் ரவி குமார், மாவட்ட பொருளாளர் நாசர் அலி, நகர துணைச் செயலாளர்கள் கார்டன் கிருஷ்ணன், இஸ்மாயில் ரீட்டாமேரி, நகர பொருளாளர் அணில்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இக்கூட்டத்தில் மாவட்ட பிரதிநிதிகள் வெங்கடேஷ், தம்பி இஸ்மாயில், கார்த்திகேயன், மாவட்ட அணிகளின் அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள், முன்னாள், இந்நாள் நகர்மன்ற உறுப்பினர்கள், கிளைக் கழகச் செயலாளர்கள், பிரதி நிதிகள், வாக்குச்சாவடி பாக முகவர்கள் கலந்துகொண்டனர்.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் வருமாறு:-

எதிர்வரும் 2026 சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு வெளியிடப்பட்டுள்ள வரைவு வாக்காளர் பட்டியலை உதகை நகரத்தில் உள்ள 79 வாக்கு சாவடி பாக முகவர்கள் (BLA 2) அவர் அவர்களது வாக்கு சாவடியில் எதிர்வரும் 16,17-112024 மற்றும் 23,24-112024 (சனி, ஞாயிறு) ஆகிய நாட்களில் நடைபெறவுள்ள வாக்காளர் சிறப்பு முகாமில் கழக தோழர்களுடன் இணைந்து வாக்காளர் பெயர் சேர்த்தல், நீக்கல், இடமாற்றம் போன்ற பணிகளை செவ்வனே மேற்கொண்டு தி.மு.கழகம் அதிகமான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற இந்நாள் முதலே கழக பணிகளை செய்திட வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தமிழ்நாடு துணை முதல்வரும், கழக இளைஞர் அணி செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் 27.11.2024 அன்று கொண்டாடுவதை முன்னிட்டு உதகை நகரில் ஏழை எளிய பள்ளி மாணவர்கள், ஆதரவற்றோர், முதியோர்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகள் போன்றவர்களுக்கு நலத் திட்ட உதவிகள் வழங்கி சிறப்பிப்பது எனவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இவ்வாறு அத்தீர்மானத்தில் கூறப்பட்டுள்ளது.

### ரூ.46 லட்சத்து 10 ஆயிரம் மதிப்பில்

# நியாய விலைக் கடை கட்டிடம்!

### ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ. திறந்து வைத்தார்!

திருவள்ளூர். நவ.15

திருவள்ளூர் மாவட்டம், பூவிருந்தவல்லி சட்டமன்றத் தொகுதி, எல்லாபுரம் மத்திய ஒன்றியம், கன்னிகாபுரம் ஊராட்சியில் நியாய விலை கடை கட்டிடம் கட்டித் தருமாறு ஊராட்சிமன்ற தலைவர் லட்சுமிமுரளி பூவிருந்த வல்லி சட்டமன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமியிடம் கோரிக்கை வைத்தார். இந்நிலையில்,சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி 2024–2025ம் ஆண்டு நிதியில் ரூ.16 லட்சம் ஒதுக்கி நியாய விலைக் கடை கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டு அதன் திறப்பு விழா நடைபெற்றது இதில் கன்னிகாபுரம் ஊராட்சி மன்ற தலைவர் லட்சுமிமுரளி, தலைமை தாங்கினார்.

எல்லாபுரம் மத்திய ஒன்றிய தி.மு.க. செயலாளர் கோடுவெளி தங்கம்முரளி, எல்லாபுரம் வட்டார வளர்ச்சி அலுவலர் ராமகிருஷ்ணன்,பொறியாளர் நரசிம்மன், ஒன்றிய குழு உறுப்பினர் தனலட்சுமிமுனுசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இதில் ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ. கன்னிகாபுரம் ஊராட்சியில் பொது விநியோக திட்டத்துக்கு நியாய விலைக் கடை கட்டிடத்தையும், திறந்து வைத்து பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கினார். அதனை தொடர்ந்து ஆயிலச்சேரி ஊராட்சியில் அண்ணா மறுமலர்ச்சி திட்டம் 2024–2025ம் ஆண்டு நிதியில் ரூ.30 லட்சத்து 10 ஆயிரம் மதிப்பீட்டில் ஊராட்சி மன்ற அலுவலகம் அலுவலகத்தை திறந்து வைத்தார் .




அரியலூர் - பெரம்பலூர் மாவட்டங்கள்



## புதிய காலணிகள் தொழிற்சாலை
### அடிக்கல் நாட்டு விழா

## ஊட்டச்சத்தை உறுதி செய் திட்டம்
### 2ஆம் தொகுப்புத் தொடக்க விழா

## அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா

தலைமை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்

புதிய காலணிகள் தொழிற்சாலை, அரியலூர்

முதலீடு 1,000 கோடி ரூபாய்

வேலை வாய்ப்பு 15,000 நபர்கள்



ஊட்டச்சத்தை உறுதி செய் திட்டத்தில் 76,705 தாய்மார்கள் பயன்

அரியலூர் - பெரம்பலூர் மாவட்டங்கள்

ரூ. 120 கோடி மதிப்பிலான 53 திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டுதல்

ரூ. 88 கோடியில் 507 முடிவுற்ற திட்டப் பணிகள் திறந்து வைத்தல்

ரூ.174 கோடியில் 21,862 பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகள் வழங்குதல்

செ.ம.தொ.இ/1148/வரைகலை/2024

நாள்: 15.11.2024, வெள்ளிக்கிழமை

| நேரம் : காலை 9.30 மணி | நேரம் : காலை 10.45 மணி | நேரம் : காலை 11.45 மணி |
| --- | --- | --- |
| இடம் : சிப்காட் தொழிற்பூங்கா, ஜெயங்கொண்டம், அரியலூர் மாவட்டம் | இடம் : வாரணவாசி அங்கன்வாடி மையம், திருமானூர் ஒன்றியம், அரியலூர் மாவட்டம் | இடம் : கொல்லாபுரம், அரியலூர் மாவட்டம் |

# சொன்னதைச் செய்யும் நம் முதல்வர் !

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in

வெளியீடு: இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை–600 009